# உருவகக் கட்டுரை

என்னைப்போல் பல இனத்தவர் இந்தப் பூமியில் அதிகம் உண்டு. அது மட்டுமல்ல என்னை விட மிக அழகானவர்களும் ஏராளம் உண்டு. உலகில் எல்லா நாடுகளிலும் எங்கள் இனத்தவர் வாழ்கின்றனர். எத்தனையோ வண்ணங்களில் வாழ்கின்றனர். எங்களைப் பெற்ற, பெறுகின்ற தாய்மாரே பல வகையாக இருக்கின்றனர். எங்களைப் பெற்றதும் அவர்களுக்கு இருக்கும் மகிழ்வும் மதிப்பும் தனியழகாகும்.

பல இனங்களில், பல நிறங்களில், பல அளவுகளில், பல வடிவங்களில் நானும் என்னினமும் உலகை அழகுபடுத்துகிறோம். நான் உட்பட எமது உடன்பிறப்புகளின் வாழ்க்கைக் காலம் குறுகியதே. ஆனாலும் நான் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. எங்கள் வாழ்க்கைக் காலத்தில் எம்மால் ஆன பயன்களை இந்த உலகிற்கு அளிக்கின்றோம். பெண்கள் எம்மீது அதிக ஆசை கொண்டவர்கள். நிலையற்ற இந்த உலகவாழ்வில் பல நிலையான மாற்றங்களை நாங்கள் புரிகின்றோம். என் இனத்தவர் பலர் இறைவனையும் அழகுபடுத்துவார்கள். இளமங்கையரையும் அழகுபடுத்துவார்கள். என்ன யோசிக்கின்றீர்களா? நீ மட்டும் ஒன்றுக்கும் பயன்படுவதில்லையா என என்னை ஏளனமாக எண்ணுகின்றீர்களா? அவசரப்பட்டு அப்படி எண்ணி விடாதீர்கள். பின்னர் அப்படி நினைத்ததற்கு நீங்களே கவலைப்படுவீர்கள். பெருமை பேசக்கூடாது என்பார்கள் ஆனால் என் பெருமையை நான் பேசாமல் இருக்க மாட்டேன். ஏன் என்றால் எனக்குக் கிடைத்த பெருமை என்ன மிக எளிதானதா?

இந்த உலகில் இனியும் எப்பவும் யாருக்கும் கிடைக்காத பெருமையல்லவா எனக்குக் கிடைத்திருக்கின்றது. இது புரியவில்லையா? புரியும்படி கூறுவதானால் யாருக்குமே கிடைக்காத தலைவன் உங்களுக்குக் கிடைத்தமாதிரி. என்ன இன்னும் என்னை யார் என்று புரியவில்லையா?

எதிர்பாராத வகையில் எனக்கு இந்தப் பெருமையைக் கொடுத்தவனே உங்கள் தலைவன்தான். உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு நெருக்கம். உங்கள் தலைவன் பிறந்த மாதத்தில்தான் நானும் பிறந்தேன். இப்போதும் புரியவில்லையா? நான் யார் என்று. மாவீரர் காலடியில்தான் நான் கிடப்பேன். அதுதான் எனக்கும் பெருமை. உங்களுக்குப் பிடித்த நிறங்களிலே தான் நானும் இருப்பேன். என் இயற்பெயர் காந்தள். ஆனாலும் நீங்கள் என்னை அழைக்கும் பெயர்தான் எனக்கு மிகவும் பிடிக்கும். நான்தான் உங்கள் தேசிய மலர் கார்த்திகைப்பூ. இப்போது சொல்லுங்கள் எம் இனத்தவரிடையே எனக்குத்தானே பெருமை.